News and Articles in Tamil and English Please send them to:

THE EDITOR,
The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka
Under No.Q / J / 104 / News / 89
Established : 1841 : A Christian Weekly : Published Every Friday
Vol: 155 Jaffna, Friday 11, Nomveber 1994 No. 27
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island : Rs.100/-
For Advertisements
Apply to:
THE MANAGER
The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

## Cement Factory at Kankesanthurai

An 18 member delegation was sent by the government to assess the damages, and estimate the amount required to get the factory working. The delegation has reported that millions of rupees will be needed, to renovate the buildings and replace the necessary equipment. There have been more losses since the last estimate in 1991. The team is said to have reported, that even during their visit army was removing things from the factory.

## Christian Theological Seminary Sunday

Sunday the 6th of November 1994 was observed as Christian Theological Seminary Sunday in the Churches of the Jaffna Diocese of the C. S. I., on the 11th anniversary of the Seminary. This was also to promote the programme " Train A Prsebyter ( TAP ) . The Diocese spends about two and a half lakhs rupees to train a presbyter, who follows a four year course at the Seminary. This Programme has called for coutributions from every church member and special collections on this Sunday, whereby a fund can be floated to support at least one student at the Seminary in the near future.

A special service was held in the Church at Uduvil by the staff and students of C.T S Maruthanamadam.

The Principal the Rev. D.S Thiagarajah began the service with a prayer of invocation and also preached the Sermon. The service was conducted by the Rev. G. D. Anandarajan, Lecturer, C T S. The Bible lessons were read by students John Selvam and Gunadevi. The Rev.D R. Ambalavanar Dean of studies C T.S closed the Service with prayer and benediction.

## Rupees 538 Million for Defence

The Ministry of Defence has been granted Rupees 538 million by the government as its expenditure for the remaining two months of this year.

In contrast, only Rupees 225 million is being spent on relief and rehabitiation.

## A NAVAL LANDING CRAFT DAMAGED

The Black Sea Tigers of the L. T. T. E. attacked a landing Craft of Sri Lankan Navy near Vettrilaikerne, at the early hours of November 9th.

The Craft was severely damaged, report the local news papers A fight between the L. T. T E. and the armed forces of Sri Lanka which lasted three hours, followed.

It is believed that heavy losses were incurred on Navy & Army. A Major of the L T T E died in the battle.

The Airforce planes bombed Vadamarachchi East, civilian areas in retaliation.

## Observation Visit By HELVETAS

A Swiss based development organization -HELVETAS-which commenced its activities in Sri-Lanka, covered its activities throughout the entire country. After the ethnic conflict in 1978 it curtailed its activities in the Nothern and the Eastern provinces They do not implement projects directly; they channel them through local organisations. On an invitation by a delegation from Jaffna which met them in Colombo, Mr. M. Mahuruf Project Assistant of the above organisation was in Jaffna from 5th to 8th November on a factfinding mission. He visited our diocesan office on the 7th. He was briefed on all projects undertaken by the diocese in the North and East, rehabilitation and development projects undertaken by the diocese, the form of assistance provided to the refugees, and displaced families, the donors, and the organizational and administrative set up of the J D. C S. I.

## Three Thousand Teachers for the North

The government has decided to appoint another 3000 teachers to the schools in the North and a competitive examination is to be held in the North very soon to select these teachers.

## The Rev. Samuel Eliathamby Memorial Foundation.

### Nursary school progrmme

The Annual Nursary School-Programme of the above foundation was worked out on Saturday November 5th 1994 at 3p.m with Mrs. S V. Jebanesan as the Chief Guest.

An attractive programme of songs, dances and receiations, and other items were presented by the 28 pupils (under five years age) of the School. Miss. Ranji Joshua the Teacher in Charge of the School, assisted by another teacher should be commended for the very high standard of the programme. The Needle work section of the foundation under a qualified Needle work Teacher has 25 young girls undergoing training at this section. An exhibition of the work in this department followed the Nursary programme.

The Rev. Eliyathamby foundation was set up at Uduvil by Mr. Selwyn Eliyathamby in memory of his grand father who was Pastor in charge of the Uduvil Church for over Thirty years.

## The Presidential Election

The election that takes place on 9th November is being called the "widow's war"

35,000 police are being deployed and there are about 9,500 poling booths.

Of the six Candidates who are contesting, Mr. Nihal Gallapathy has withdrawn in favour of the candidate who has promised to abrogate the Executive Presidency.

Those contesting are, the Prime Minister, Mrs Chandrika Bandaranayake Kumarnathunga as candidate of People's Alliance.

2. Mrs. Sirima Dissanayake U. N. P.
3. Mr. A. J. Ranasinghe Independent,
4. Mr. Hudson Samarasingh Independent.
5. Dr. Harichandra Wijethunga Bhumi Buthraya Party.

It should be noted that Both Mr. A. J. Ranasinghe and Mr. H. Samarasinghe were members of U. N. P. earlier.

Mrs. Chandrika Kumaranathunghe is expected to win by obtaining 50-55percent of the votes polled according to the opinion polls. She has the support of all minority groups

(Results in Page 4)

## Service of Thanksgiving

A service of thanksgiving for the life and work of Ruby Ariyamalar Appudurai, was held on Monday the 19th September 1994 at St. John's the Baptist Church, Chundikuli. The Rev. S. P. Nesakumar led the Service. Bible readings were read by Mrs. M. Spencer and Mrs. L. Atputharaja (a niece of the deseased.) Mrs. Daya Thiagarajah in her tribute spoke of the various talents of Ruby, and how she used them for the glory of God. She had been an asset to the late Rev. K. S. Jeyasingam (her brother-in-law) when he was the Presbyter of

(Continued on page 4)

# தமிழர் பண்பாட்டு மரபுகளும் சைவர்களும்

தொல்சிறப்பு வாய்ந்த பண்பாடுகளில் தமிழ் மக்களுடைய பண்பாடு தனித்துவம் மிக்கதாகவும் சிறப்பு வாய்ந்ததாகவும் காணப்படுகிறது. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சங்கங்கள் வைத்துத் தமிழாய்வு செய்யப்பட்ட காலம் எனலாம். சங்க இலக்கியங்களில் சைவசமைய நெறிமுறைகளை ஒத்ததான நடைமுறைகள் நிலவியதாக அறிய முடிகிறது முருகன், திருமால், கொற்றவை, இந்திரன், வருணன் ஆகிய தெய்வங்களுடன் கடவுள் என்று குறிக்கப்படும் சிவனை ஒத்த தெய்வ வழிபாடு நிலவியதாக நாம் அறிகின்றோம். முக்கட் செல்வன் வாலிழை பாகத்தொருவன் என்ற சொற்கள் சிவனைக் குறிக்கின்றன.

சங்க இலக்கியங்கள் தருகின்ற தகவல்களின்படி கி.பி முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் தமிழ்நாடு அமைதியும் சிறப்பும் பொருந்தி விளங்கியது. ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்க்கூறு நல்லுகம்'' என்று அழைக்கப்படுகின்ற பிரதேசத்திலே சேர சோழ பாண்டியர்களுடைய செங்கோல் நெறிதவறாத ஆட்சியின்கீழ் மக்கள் இயற்கையோடு ஒட்டிய எளிய வாழ்க்கையை வாழ்ந்தனர். குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகைப்பட்ட நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் அகத்தும் புறத்தும் மாறுபாடில்லாத நல்வாழ்க்கை நெறியை மேற்கொண்டிருந்தனர். அன்பும் காதலும் ஒழுக்கமும் அவர்களது அகவாழ்வில் இழையோடியிருந்தது. கடமையும் வீரமும் புறவாழ்வில் இடம்பெற்றிருந்தது. அரசியல் வாழ்வும் சமூகவாழ்வும் ஆடல்- பாடல் முதலிய கலைவாழ்வும் மக்களை வளம்படுத்தியது. அறிவு சான்ற புலவர்கள் பலரும் வாழ்ந்தனர். அரசர்களும் வீரர்களும் நிகழ்த்திய வீரதீரச் செயல்களும் மக்களின் மெல்லுணர்வுகளும் இலக்கியங்களாக வடிக்கப்பட்டன

சைவசமயமானது சிறப்புற்று விளங்கிய காலமாக தென்னாட்டிலே சங்ககாலத்தைக் குறிப்பிடலாம். சங்ககால மனிதன் உலகியற் தேவைகளுக்கு வேண்டிய தெய்வங்களை வழிபட்டான். காதலை வேண்டி முருகனையும் போரில் வெற்றிபெற கொற்றவையையும் வழிபட்டனர், சங்கத் தமிழன் ஆத்மீக இன்பங்குறித்து இறைவனை வழிபடாவிட்டாலும் உயர்ந்த அறநெறிப்படி கட்டுக்கோப்பான வாழ்க்கையை வாழ்ந்து வந்தான். இத்தகைய மனிதன் காதல் நிறைவேறவேண்டுமென இறைவனை வேண்டி பிரார்த்தித்தான் அதற்காக வெளிநாட்டு வழிபாட்டினை மேற்கொண்டு வழிபட்டான். இதேபோன்றே போரில் வெற்றி பெறுவதற்கும் அல்லது வீரச்சாவினைக் குறித்தும் கொற்றவையை வேண்டி வழிபட்டான். இங்கு மனிதன் தனது உயர்ந்த லட்சியமான வாழ்க்கை முறையை குறித்தே தெய்வங்களை வழிபட்டுள்ளான்.

சங்க காலத்திற்குப் பின்னர் சமண, பௌத்த சமயங்களின் வருகையால் தமிழ்ப்பண்பாட்டில் மேலும் பல கிரியைகள், நடைமுறை வாழ்க்கையில் இணைந்து கொண்டன. பல்லவர் காலத்தின் நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றியதால் சைவ, வைணவ மதங்கள் புதிய பரிமாணங்களைப் பெறுகின்றன. ஆலயங்கள் பெருகி வளர்ந்து, சோழர் காலத்தில் பிரமாண்டமான ஆலயங்கள் கட்டியெழுப்பப்படுகின்றன ஆலய வழிபாடும், பக்தியோடு கூடிய பாமாலைகளின் வளர்ச்சியும், இறைவன் மீது ஆராத அன்பு கொண்ட மெய்யடியார்களின் தோற்றமும் சைவ சமயத்தில் பேரொரு எழுச்சியையும் மாற்றத்தையும் ஏற்படுத்தியது.

சனாதன தர்மம் என்று போற்றப்பட்டு வருகின்ற இந்து சமயத்திலே தனித்துவம் பெற்ற சமயமாக விளங்குவது சைவ சமயமாகும். சைவம், சாக்தம், வைணவம், காணாபத்தியம் கௌமாரம் சௌரம் என்று ஆறு தனித்தனிப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்த போதிலும் இன்று ஏனைய ஐந்து மதங்களும் சைவத்துள் ஐக்கியமாகி விட்டன. சைவசமயத்தவரால் போற்றப்பட்டு வரும் சடங்குகள், கிரியைகள் கூட வாழ்வியலுடன் இணைந்ததாகவே காணப்பட்டு வருகின்றது.

சைவத்தமிழ் மக்களுடைய பண்பாட்டுக் கோலங்களை திருமண விழாக்கள், மரணச்சடங்குகள், ஆலய வழிபாட்டு முறைகள் அன்றாடக வாழ்க்கை நடைமுறைகள் என்பவற்றிலிருந்து நாம் தெளிவாகக் காணக்கூடியதாகவுள்ளது.

திருமணக்கிரியைகள் எமது பண்பாட்டில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. எமது பண்பாட்டில் எண்வகைத் திருமணங்கள் நிலவியதாகக் காணப்பட்ட போதும், பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டு, கன்னிகாதானம் செய்து கொடுக்கப்படும் திருமணமே 'கற்பியல்' என்று கூறப்பட்டு சிறப்பானதாகக் கருதப்பட்டது. இக்கால முறைப்படி அந்தணர் முன்னிலையில் அக்கினி சாட்சியாக அம்மி மிதித்து, அருந்ததி காட்டி உற்றார் உறவினர் முன்னிலையில் அவர்களுடைய ஆசீர்வாதத்துடன் திருமணங்கள் நடைபெறுகின்றன.

''மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிய தீவலம் வந்து'' கண்ணகியும் கோவலனும் திருமணஞ் செய்ததாக சிலப்பதிகாரம் கூறுகிறது. திருமண நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் அர்த்தமுள்ளதாகவும் வாழ்க்கை நடைமுறைத்துவத்தை உணர்த்துவதாகவும் உள்ளது. பால்பழம் உண்ணுவது தலைவனும் தலைவியும் பாலும் பழச் சுவையும் போல இனிமையாகவும் அன்பாகவும் வாழவேண்டும் என்பதை உணர்த்துகின்றது. அம்மி மிதிப்பதும் அம்மி போன்று மணப்பெண்ணும் கற்பிலே திண்மையாக இருக்க வேண்டும் என்பதனை கணவன் கண்கண்ட தெய்வம் அவனுக்கு துரோகம் செய்தால் மனைவி கௌதமரின் அகலிகையைப் போல் கல்லாய் மாறுவாள் என்பதனை குறிக்கின்றது. தலைவன் தலைவியின் காலைத்தூக்கி அம்மியில் வைப்பது அவன் எந்நாளும் படிதாண்டாப் பத்தினியாக விளங்கவேண்டும் என்பதனை உணர்த்துவதற்கேயாகும் மாலை மாற்றுவது கணவனும் மனைவியும் ஈருடல் ஓருயிராக வாழவேண்டும் என்பதனைக் குறிப்பதற்கேயாகும். மூன்று முடிச்சுப் போடுவது அவள் தலைவனுக்கு சமூகத்திற்கு மனசாட்சிக்குக் கட்டுப்பட்டவள் என்பதனைக் குறிப்பதேயதாகும்.

( தொடரும் )

திருமதி சி. விசுவலிங்கம் B. A Dip.in.Edu.
(அதிபர், நவாலி மகா வித்தியாலயம்)

# பழம்பெரும் பாடல்களின் வரலாறு

## '' நீங்காதிரும், என் நேச கர்த்தரே''
## ( Abide with me )

ஹென்றி பிரான்சிஸ் லைட் என்பவருக்கு வாழ்க்கை அவ்வளவு எளிதானதாக அமையவில்லை. இளம் பருவத்தில் வறுமையால் வாடிய இவர் எப்படியோ ஊழியப் பயிற்சியை முடித்து, இருபத்தோராம் வயதில் சிறு சபையொன்றிற்கு ஆயரானார். 1847 ஆம் ஆண்டு ஓர் மாலைப் பொழுதில் ஆழ்ந்த துக்கத்திலிருக்கும் போது இப்புகழ் பெற்ற பாடலை இயற்றினார் அன்று மாலை அவர் நடத்தியது தான் இறுதியான இராப்போஜன ஆராதனை. கொடுமையான வியாதியொன்று அவரைத் தாக்கி விட்டதால் வேலையில் இருந்து ஓய்வு பெற்று இங்கிலாந்தை விட்டுச்சென்று தனது வாழ்நாளைச் சிறிது காலமாகிலும் கூட்டிக்கொள்ள ஆயத்தமாகிக் கொண்டிருந்தார் அன்று மாலையில் வழக்கமாய்ச் செல்லும் தோட்டப்பாதை வழியே கடலோரத்திற்குப் போய்க் கொண்டிருக்கையில் இப்பாடலின் வரிகள் அவருக்குக் கிடைத்தன. மறுநாள் பிரான்சுக்குப் பயணமானார் அங்கு அவர் இன்னும் பலன் குன்றி அதே மாதம் காலமானார்.

## 'எல்லாருக்கும் மா உன்னத கர்த்தாதி கர்த்தரே'
## All hail the power of Jesus's Name

1726ஆம் ஆண்டு இங்கிலாந்தில் எட்வேர்ட் பெரோனட் பிறந்தார் உறுதியான மன நிர்ணயங்களைக் கொண்ட இவர் அவற்றிற்காக எவ்விதப் பாடுகளையும் அனுபவிக்கத் தைரியம் கொண்டவர் அகதிகளான தனது பெற்றோரிடமிருந்து பல குணங்களை இவர் பெற்றிருந்தார். இவரது தந்தையும் ஓர் அஞ்சா நெஞ்சம் கொண்ட பிரசங்கியார். வெஸ்லி சகோதரர்க்கு பெரோனட் நெருங்கிய நண்பராயிருந்தார் ஆனால் உபதேச வேறுபாடுகளினால் அவர்களை விட்டுப் பிரிந்தார். 1757இல் இங்கிலாந்துத் திருச்சபையைத் தாக்கி ஓர் பாடல் இயற்றினார். இதனால் அவரது நண்பர் பலர் அவரை வெறுத்தனர் ஆனால் அவர் இயற்றிய 'எல்லோருக்கும் மா உன்னதர்' என்ற பாடலோ பிரபலமாக இன்றுவரை எங்கும் எவராலும் பாடப்பட்டுவருகிறது.

## 'இயேசுவுக்கே ஒப்புவித்தேன்'
## (All to Jesus I Surrender)

கலைத்துறையில் புகழெய்த வேண்டும் என்பதே ஜட்சன்வான் டெலண்டர் என்பவரின் தணியா விருப்பமாகும். பென்சில்வேனியாவிலுள்ள கலைக்கல்லூரியில் பட்டம் பெற்றதும் அவர் பொதுப்பள்ளித் திட்டத்தில் கண்காணிப்பாளராக அமர்த்தப்பட்டார். கர்த்தரின் அழைப்பிற்கும் கலைத்துறையின் கவர்ச்சிக்குமிடையே அவருக்கு ஏற்பட்ட ஐந்தாண்டுப் போராட்டம் அப்பொழுது தான் தொடங்கியது. முடிவில் கர்த்தருடைய சித்தத்திற்கு அடிபணிந்து விட்ட

( தொடர்ச்சி 3 ஆம் பக்கம் )

தாரகை ஒளி

கர்த்தாவே என் விண்ணப்பத்தைக் கேளும்
என் கூப்பிடுதல் உம்மிடத்தில் சேர்வதாக

உதயதாரகை

ஆதீன காரியாலயம், Estd. 1841 வட்டுக்கோட்டை

மலர்: 155 11 - 11 - 1994 இதழ்: 27

# இறையியல் கல்லூரி ஞாயிறு

கடந்த ஞாயிறு தினமானது சுன்னாகம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் தினமாக அனுஷ்டிக்கப்பட்டது. நமது சூழமைவுக்கேற்ப தமிழ் மொழியிலேயே இறையியல் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பதை, நன்குணர்ந்த தமது இளைப்பாறிய பேராயர் பேரருட்திரு. டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் தூர தரிசனத்துடன் இறையியல் கல்லூரியை நிறுவினார். இறையியல் கல்லூரியானது அவர் பெற்றெடுத்த குழந்தைகளில் ஒன்று எனலாம். கல்லூரி வளர்ச்சியில் அவர் தொடர்ந்து ஆற்றிவரும் பங்கு அளப்பரியது. அதுபோல் எமது தற்போதைய பேராயர் டாக்டர் எஸ். ஜெபநேசனும் இறையியல் கல்லூரிக்குத் தமது உதவிகளைப் பல்துறைகளிலும் அளித்து அதை வளர்க்க அரும்பாடுபடுகிறார்.

இன்று யாழ் ஆதீனச் சபைகளில் பணிவிடையாற்றுவோர் ஐம்பது வீதத்திற்கும் மேலானோர் இக்கல்லூரியில் கற்றே அரங்கேறியவர்கள் எனும் பெருமையையும் இந்த கல்லூரி பெற்றுள்ளது.

ஆற்றப்படும் பணிகளுள் திருப்பணிவிடை என்பது வித்தியாசமானதும், முக்கியமானதுமாகும். கிறிஸ்தவ திருப்பணிவிடை புரிபவர்கள் இறையியல் கல்வி கற்றிருத்தல் வேண்டும். இல்லாவிடின் ஏற்றமுறையில் பணி ஆற்றல் கடினம். கீழ் நாடுகளில் இறையியல் கல்லூரிகள் துவக்கப்பட்ட காலந்தொடங்கி இறையியல் கல்வி ஆங்கிலத்திலேயே கற்பிக்கப்பட்டு வந்தது. கடந்த சில ஆண்டுகளாக இக் கல்லூரிகள் தத்தம் தாய் மொழியல் மாணவர்க்கு குருத்துவ பயிற்சி அளித்து வருகிறது. இதற்கு அதாவது தாய்மொழியில் இறையியற் கல்வி கற்பிக்கப்படலாம் என்பதற்கு, சுன்னாகம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி ஒரு சான்றாக அமைகிறது. எமது சூழமைக்கேற்ப எமது மொழியிலேயே இறையியல் கல்வி கற்பிக்கப்படுதல் கிறிஸ்தவம் என்பது ஒரு அந்நிய சமயம் எனும் தவறான கருத்து மக்களிடையே இருந்து களைந்தெறியப்படுகிறது.

எம் நாட்டில் உள்ள கிறிஸ்தவ தமிழ்ச்சபைகள் உயிருள்ள சபைகளாக, ஆழமாக வேரூன்றப்பட்ட சபைகளாகத் திகழ வேண்டுமேயாகில், இன்றைய நாட்களில் தமிழ்ப் பகுதிகளில் உள்ள மக்கட்கு சீரிய முறையில் திருப்பணிவிடை செய்யப்பட வேண்டுமேயாகில், கிறிஸ்தவத் திருத்தொண்டு புரிவதற்கு பயிற்றப்படும் நமது மாணவர்க்கு தமிழில் இறையியற் கல்வி கற்பிக்க வேண்டியது அவசியம் எனும் உயர் நோக்கங் கொண்டே எமது பிரதேசத்திலேயே கிறிஸ்தவ இறையியல் கல்லூரி இயங்கி வருகிறது.

இது எமது கல்லூரி எனும் உணர்வு ஒவ்வொரு சபை மக்களுக்கும் வரவேண்டும். இறையியல் கல்லூரி மெருகேற ஒவ்வோருவரும் தத்தம் பங்களிப்பினை நல்க மனமுவந்து முன்வரவேண்டும். உன்னதபணியாம் உயர்பணியாற்றும் குருமாரைப் பயிற்றுவிக்கும் இக் கல்லூரிக்கு வேண்டிய ஒத்தாசைகளைச் செய்யுங்கள். ஒத்துழைப்பை நல்குங்கள் விடாது செபியுங்கள்.

குருத்துவப் பயிற்சி
திருச்சபையின் உயர்ச்சி

# பெண்கள் பிரச்சனையும் இறைமக்கள் பொறுப்பும்

## திருப்பணியில் பெண்கள்

மகதலேனா மரியாள் தாயர் பேதுருவுக்கு ஒத்த திருப்பணி செய்தவர் என்றும் திருச்சபையில் இதனால் ஏற்பட்ட ஆண் பெண் ஆதிக்கப் போராட்டம் பெண்ணின் இடத்தைக் கட்டுப்படுத்துவதில் முடிந்தது என்று கூறுவர். பவுலடியாரின் திருமடல்களில் திருப்பணியில் பங்கு கொண்ட பல பெண்களின் பெயர்கள் காணப் பெறுகின்றன? திருத் தூதுவர்களாகவும் அருட்பணியாளர்களாகவும் துணை ஊழியர்களாகவும், இறைவாக்காளராகவும், வழிநடத்துகின்றவர்களாகவும் அவர்களைக் காண்கிறோம். பெபோயானை உங்களுக்கு அறிமுகம் செய்ய விரும்புகிறேன். அவர் கெங்கிரேயா ஊர்த் திருச்சபையின் திருப்பணியாளராக இருப்பவர். நீங்கள் இறையடியார்களை ஏற்கும் முறையில் அவரை உங்கள் உடன் அடியாராக ஏற்றுக்கொள்ளுங்கள் (ரோ 16 1–2) ஆண்டவருக்காக உழைக்கிறவர்களாகிய திரிபெனாளுக்கும் திரிபோசாளுக்கும் என் வாழ்த்தைத் தெரிவியுங்கள். ஆண்டவருக்காக கடுமையாக உழைத்து வந்த அன்பார்ந்த பெர்சியாளுக்கு என் வாழ்த்தைத் தெரிவியுங்கள். இவைகள் எல்லாம் பவுலடியார் கூற்றுக்களே. யோவேலின் இறைவாக்குகளில் மனுமக்கள் யாவர் மீதும் என் ஆவியை ஊற்றுவேன் (அப் 2: 17–18) என்று ஆவி வாழ்க்கையில் பெண்களின் உரிமையும் எடுத்துரைக்கப்படுவதைக் காண்கிறோம் இச் செய்திகளை எல்லாம் விடுத்துப் பெண்களின் நலனுக்குப் பாதகமானவற்றையே எடுத்துக்காட்டுவதில் திருச்சபை கவனம் செலுத்தி ஆண் ஆதிக்க மரபைத் திருச்சபையில் உறுதிப்படுத்திக்கொண்டிருக்கிறது. பெண் இன்று திருச்சபையில் ஒத்த பணி ஆற்ற முடியுமா? அதிகாரங்களை பகிர்ந்து கொள்ள வாய்ப்பு உண்டா? திருச்சபை ஆண் ஆதிக்க மரபிலிருந்து விடுபடுமா என்பதே இன்றைய கேள்வி.

பிரச்சனைகளில் ஒரு சில இவை.- இறைமக்களின் பணி யாது?

கிறிஸ்து பெருமான் உலகில் இறையரசை நிறுவும் பொறுப்பை இறைமக்களிடம் விட்டுப்போனார் ஆனால் இன்று நடப்பதென்ன பேரரசு பரவி வருகிறது சத்திரங்களும், தர்மங்களும், பொருளற்றுப் போகின்றன. மகிழ்ச்சி தாண்டவமாடவேண்டிய இல்லங்களில் கவலைகள், கண்ணீர், மனநோய்கள், எரிப்புகள், தற்கொலைகள் உரிமையைப் பாதுகாக்க வேண்டிய நிலையங்களில் கற்பழிப்பு முறிந்ததைக் கட்டிக் கோணலானவைகளை நேராக்க வேண்டிய மருத்துவ மனைகளில் பொய்ச் சான்றுகள் நீதி நிலையங்களில் அநியாயத்தின் ஆளுகை இத்தகை சூழலில் இறைமக்களின் பணி யாது? அடிமைத்தளையில் கட்டுண்டு கிடக்கும் பெண்ணினத்தைத் திருச்சபைக்கு உள்ளும் புறமும் யார் கட்டவிழ்த்து விடுவார்.

தொடரும்.............

தொகுப்பு. A. R. T.

## வெள்ளப் பெருக்கும் புயலும்

இந்தியாவின் தமிழ் நாட்டில் புயல் காரணமாக 29 பேர் மரணமடைந்தனர். ஆந்திரப்பிரதேசத்திலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இத்தாலியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் ரயில் தண்டவாளங்களும் சேதமடைந்துள்ளன.

## கிறிஸ் பிராங் யாழ்.வருகை

அவுஸ்திரேலியாவின் ஐக்கிய திருச்சபையைச் சேர்ந்த திரு. கிறிஸ் பிராங் என்ற இளைஞர் ஒரு வார விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

சென்ற சித்திரை மாதம் தொடக்கம் ஒரு வருடத்திற்கு மட்டக்களப்புஆண்கள் இல்லத்தில் கடமையாற்றுவதற்காக இங்கு வந்தார்.

## பழம் பெரும்......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தனது நீண்டகாலப் போராட்டத்தை மனதிற் கொண்டு இப்பாடலை இயற்றினார். " என் இருதயத்தில் தேவன் ஒரு பாடலை மறைத்து வைத்திருக்கிறார் அதை அவர் மீட்டியவுடன இதுவரை நான பாடியிராத பாடல்கள் என் வாயில் சங்கீதமாயின என்று தன் அனுபவத்தைக் குறித்துப் பின்னர் எழுதினார். (தொடரும்)

தொகுப்பு T. J.

(நன்றி ' ஆசிர்வாதம் '' சஞ்சிகை )

# The Morning Star

**Diocesan Office, Vaddukoddai** **11 . 11 . 1994**


## *EDITORIAL*

## CHANDRIKA KUMARANATUNGE – THE PRESIDENT

Chandrika Bandaranayake Kumaranatunge gets the honour of being elected the first woman President of Sri Lanka. She is the fourth woman to be elected as the Executive President in the whole world, first being Mrs. Korazine Akino of Philippines,

Chandrika inherited her political heritage from both her parents; her father S. W. R. D. was the Prime Minister in the late fifties; her mother was the first woman Prime Minister in the whole world. Chandrika got involved in politics along with her late husband Wije Kumaranatunge an actor politician. Wije although was an actor of silver sereen was not an actor on the political platform. He was very transparent; his actions being very straight. He was on the side of the oppressed lots, both Sinhalese and Tamils. He was the first Sinhala politician who was genuinely interested in solving the ethnic problems. In spite of stiff opposition, he came to Jaffna to discuss with the L. T. T. E. to get first hand information about the Tamil cause. No wonder Chandrika opened an avenue for talks between the government and the L. T. T. E. as soon as she became the Prime Minister.

Chandrika saw two cruel deaths in her family. Firstly, her father succumbed to a bullet from the gun of a coward. May be some thought that ' Banda ' would make some social reforms which would affect the bourgeois and would grant some rights of the Tamils. Therefore, they killed him. Wije was becoming popular among the afflicted; they saw a saviour in him, so they started to rally round him. A few interested, got alarmed and brought an end to his life. He was also harassed in many ways before his death. He laid down his life for the sake of the poor, and this inflicted pain on Chandrika. The one who was on the side of the afflicted became herself affected.

Only a suffering person will know the miseries of suffering masses. Therefore, it is our belief that she would make use of her new position as the Head of the State to solve the problems of the suffering masses. The Church is people. Christiatnity started as a mass movement among the poor and slaves. The early Church comprised of the poor, the downtrodden and afflicted. But when it came to Sri Lanka it got rooted among the ' elites ' and lost its salt. The Church in Sri Lanka was siding with the bourgeois. The Church then changed its course and became Church for the poor, Today the Church in Sri Lanka has again got its savour. The Church today is for the poor and of the poor. The Church which saw the suffering of the masses at the hands of a few wealthy, stood on the side of the poor, the afflicted and the downtrodden as done by her Master the Lord Jesus Christ.

The Church, because of her stand, herself became a suffering church. Even the hierarchy of the church is converted. Today the church fathers talk of liberation and human rights. They side the suffering masses. This new awakening in the church has a tremendous impact on the church members, Today, the church stands at her rightful place. The outcome of the recent General Elections and the Presidential Election is partly due to this impact.

Today, we have a qualified, open minded, highly educated person as the Head of the state. We know she is committed to solve the problems of the suffering masses, Chandrika experienced suffering, the church also is experiencing suffering The church, therefore while rejoicing at her victory should rally round her and help her solve the pressing problems of the land.

A. A. P.

### Service of Thanksgiving......

(Continued from page 1)

the various churches of the J. D; C. S. I. Mrs. Daya relate how she trained the choir and encouraged the youth in their church activities at Tellipallai Church. Mr. J. J. Atputharajah read a tribute sent by Ruby's brother, Mr. E. S. Appudurai from Canada. Mr. Appudurai in his tribute traced the background of Rubys's life and brought effectively how she was able to be a shining witness to the love of Christ. She served as a teacher at various government schools until she retired from the Tamil Convent Maha vidiyalayam, Jaffna. Her talents and achievements were not confined to academic excellence. She was an accomplished singer with a melodious voice which she used unsparingly to enhance and beautify church services.

A group of students from the Tamil Convent MV, Jaffna rendered a special song. The Rt. Rev. D. J. Ambalavanar preached a sermon basing his thoughts on the 'leavened bread.' He explained how Ruby was able to convert all her sorrows and disappointment into a life of joy and happiness through her devotion to the Lord. The Rev. G. D. Anandarajan led the Litany of Thanksgiving. Grateful thanks were supplicated to the Almighty for the life of Ruby which reflected her deep commitment to the tenets of Christian faith; her services as a teacher, Lay Preacher and Choir-mistress and her special services to the Community as secretary of the William Memorial Women's Centre for many years.

The service came to a conclusion with the benedication pronounced by the Rt. Rev. D. J. Ambalavanar. The members of Ruby family hosted those present to a 'Tea' in the Parish Hall.

**J. J. Atputharajah**

### *Flash!*

### *Chandrika Wins.*

The election results have been released at the time of going to press. Chandrika won the presidential election with over whelming majority of about 2 million votes, inspite of widespread propaganda against her. She got over 4. 2 million votes or 62. 28% of total votes polled; her nearest rival Sirima Dissanayake got only 2.7 million votes.

Chandrika Kumaranathunge in her speach said, it is not her victory but the victory of the millions who suffered, and politically victimised for 2 decades. It shows that people are tired of corruption, and state terrorism.

She further said that the people have given a mandate to implement the proposals of the Government; they are abrogating the executive presidency, solving the ethnic problem, wiping out corruption and building a true democratic society.

### Chris in Jaffna

Mr. Christopher Wright of Uniting Church of Austrlia who is on an year's assignment with our Discese and attached to the Boys Home Batticaloa is in Jaffna from Sunday November 6th for one week. He is at present visiting various places in Jaffna. The main purpose of his visit is to see the conditions of the refugee camps and buildings damaged during the on going war.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka under No. Q/J/140/94. News Printed for the Jaffna Dioces of the Church of South India at the American Ceylon Mission Press. 182, Ist Cross Street, Jaffna on Friday the 11th of November 1994 and published by Mr. T. A. Tambiappa, Diocesan Office, Vaddukoddai.